REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 10 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :134 பங்குனி 26ஆம் நாள் புதன்கிழமை 08 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# நாடாளுமன்றத்தை கூட்டவே முடியாது!

## மஹிந்தவும் விடாப்பிடி



கொழும்பு, ஏப்ரல் 8

கொரோனா என்ற கொடிய வைரஸை இல்லாதொழிக்க வேண்டிய இந்த வேளையில் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதனால் எவ்வித பயனும் ஏற்படாது. பயங்கரவாதம் இருந்த காலப்பகுதியில் 20, 30 வருடங்களுக்கு முகாம்களில் வாழ்ந்திருக்கின்றோம். பிள்ளைகளுடன் மரண பயத்தில் நடு இரவில் இலை குழைகளை விரித்தும் உறங்கியிருக்கின்றோம். அவ்வாறு தம்மை அர்ப்பணித்த மக்களுக்கு, நாட்டுக்காக இந்தக் காலப்பகுதியில் வீட்டில் இருப்பது பெரிய விடயமில்லை என நான் நினைக்கின்றேன் இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்தார். 02

## தேறுகின்றார் தாவடி வாசி

### மருத்துவமனை பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணத்தில் முதலாவது கொரோனா நோயாளியாக அடையாளம் காணப்பட்ட தாவடியைச் சேர்ந்தவரின் உடல்நிலை தேறிவருவதாகவும், அவர் தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து சாதாரண விடுதிக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். 02

## தனிமைப்படுத்தல் இனி 21 நாள்கள்

கொழும்பு,ஏப்.8

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள், அவர்களுடன் தொடர்பில் இருந்தோர் 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் வீடுகளுக்கு அனுப்பட்டிருந்தாலும், தற்போது தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளோரின் தனிமைப்படுத்தல் காலம் 21 நாள்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோனா 02

## அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடில்லை

### வர்த்தக சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடில்லை. மக்கள் பயப்படத் தேவையில்லை. இவ்வாறு யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் ஜனகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02

## மருந்தகங்கள் நாளை திறக்கும்

கொழும்பு, ஏப். 8

நாட்டிலுள்ள சகல மருந்தகங்களையும் நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை திறக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி செயலணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை, ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் அனைத்து ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் திறந்து வைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. (ம22)



முச்சந்தி முரளி

"அவசியப் பொருள்களை அநாவசியமா வாங்காட்டி ஒருக்காலும் தட்டுப்பாடே வராது கண்டியளோ"

## பிரிட்டன் பிரதமரின் உடல்நிலை மோசம்

லண்டன், ஏப். 8

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்த பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று சர்வதேச 02

## பாதிப்பு 1,400,000 உயிரிழப்பு 78,000

வுகான், ஏப். 8

கொரோனா வைரஸால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 லட்சமாக அதிகரித்தது. அவர்களில் சுமார் 78 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். சீனாவில் டிசெம்பர் மாதம் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் உலகில் 200க்கும் 02

## 185 பேருக்கு தொற்று; 42 பேர் நலம்

கொழும்பு,ஏப்.8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்று மட்டும் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 178 இலிருந்து 185 ஆக அதிகரித்துள்ளது. 02

## 16,892 பேர் கைது

கொழும்பு,ஏப்.8

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில், 16 ஆயிரத்து 892 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 4 ஆயிரத்து 313 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. 02

## அம்புலன்ஸ் சேவைக்கு 0212226666

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுவசரிய அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் ஏதாவது இருந்தால், 021 222 6666 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அவர்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ,5)

## உணவு இல்லையேல் உடன் அழைக்கலாம்

### வவுனியா மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

வவுனியா மாவட்டத்தில் ஊரடங்கால் பாதிப்படைந்து உணவுக்குத் எவராவது சிரமப்பட்டால் உடனடியாகவே மாவ 02



செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க...

செய்தி
077 316 5555
076 584 2222
021 493 0000

விளம்பரம்
071 618 2182
077 959 2628
021 493 1111

## நாடாளுமன்றத்தை..

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு ஆற்றிய விசேட உரையின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாம் வாழ்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது இந்தக் கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முறையிலேயே உள்ளது. எங்களது அவதானம், எங்களது அர்ப்பணிப்பு, ஒழுக்கம் என்பவற்றின் அடிப்படையில் தான் இவ்வாறான பாரிய நோய்த் தொற்றில் இருந்து நாங்கள் வாழ்வதா, சாவதா என்பது தீர்மானிக்கப்படுகின்றது.

அதனால் தான் இந்த நோய்த் தொற்று உலகுக்குத் தெரியவந்த சந்தர்ப்பத்தில் இருந்து ஜனாதிபதியுடன், எமது அரசும் மக்களின் வாழ்வு தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தி செயற்பட்டுள்ளது.

இந்த நிலையைப் புரிந்து கொண்டதால் தான் சீனாவில் வூஹான் நகரில் சிக்கியிருந்த இலங்கையர்களை, உலகின் ஏனைய நாடுகளுக்கு முன்னர் விமானம் ஒன்றை அனுப்பி எமது நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்தோம்.

அவர்களை அழைத்து வரும் போது நாம் எமது நாட்டில் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களை அமைத்து விட்டோம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து இலங்கைக்கு வரும் நூற்றுக்கணக்கானவர்களைத் தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்கள் பலவற்றுக்கு மிகவும் குறுகிய காலத்தில் அனுப்புவதற்கு ஏற்றவகையில் மத்திய நிலையங்களை ஏற்படுத்தினோம். தற்போது ஒரே சந்தர்ப்பத்தில் ஆயிரக்கணக்கானோரைத் தனிமைப்படுத்தக் கூடிய தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்கள் சுமார் 40 வரை எம்மால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

அங்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மக்கள் எவ்வித குறையும் இன்றி 14நாள்களும் பராமரிக்கப்படுகின்றார்கள்.

அதேபோன்று கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் விசேட வைத்தியசாலையை நாங்கள் 6 நாள்களில் வெலிகந்தையில் நிர்மாணித்தோம்.

அது மாத்திரமல்ல, இலங்கைக்கு வருபவர்களைப் பரிசோதனை செய்து நோய் தொடர்பான சந்தேகங்கள் இருந்தால் அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய ஆயிரக்கணக்கான நபர்களை அடையாளம் கண்டு, அவர்களின் வீடுகளுக்குச் சென்று வீடுகளிலேயே வைத்து தனிமைப்படுத்தலை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தோம்.

முதல் கொரோனா நோயாளியை அடையாளம் கண்டவுடனேயே சகல பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை வழங்கி நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுத்தோம். இது தொடர்பில் ஜனாதிபதி விசேட படையணியொன்றை ஆசிய வலய நாடுகளில்முதலில்ஸ்தாபித்ததுநாங்களே.

நாங்கள் போர்க்காலத்தில் கூட முழுமையாக ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் சுகாதாரத்துறை விசேட நிபுணர்களின் ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தினோம்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமையால் எங்களது ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் அதேபோன்று அரச காரியாலயங்களை மூடுவதற்கான நிலை ஏற்பட்டது.

அப்படி ஏற்பட்டாலும் மக்களின் வாழ்வியலுக்கு எவ்வித குறைவும் ஏற்படாத வகையில், அவர்களின் வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கான நிலையைப் பேணும் மிக முக்கிய பொறுப்பை அரசு நிறைவேற்றி வருகின்றது. மக்களுக்கான அத்தியாவசிய நிவாரணப்பொருள்களை ஜனாதிபதி செயலணி ஊடாக வழங்கி வருகின்றது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நபர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி தற்போது சிறிய மற்றும் மத்திய தர வியாபாரங்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர் அரசின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் எங்களுக்கு நாடாளுமன்றத்தில்ஒத்துழைப்புகிடைக்கப்பெறவில்லை.

அவ்வாறான நிலையில் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதனால் என்ன பயன் ஏற்படப் போகின்றது என இறையாண்மையுள்ள மக்கள் இப்போது எங்கள் எல்லோரிடமும் கேட்கின்றார்கள்.

கொரோனாவை இல்லாதொழிக்கும் இந்த நடவடிக்கையில் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு எனது அன்புக்குரிய மக்களிடம் கேட்கின்றேன்.

வேறு நாடுகள் முகங்கொடுத்துள்ள அனர்த்தங்களைப் போன்று முகங்கொடுக்காமல் மீண்டெழ முடியுமென நான் நினைக்கின்றேன். நாங்கள் முன்னேறிய இனத்தவர்கள் என்ற அடிப்படையில் மாத்திரமன்றி சுகதேகிகளான இனத்தவர்களாக மீண்டெழ வேண்டும் என்றார். (சு-22)

## 65 பேருக்கு..

அதேவேளை, நோயாளிகளில் 4 பேர் நேற்றுக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை 42 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

6 பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய 137 நோயாளிகளும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை, முல்லேரியா ஆதார வைத்தியசாலை மற்றும் வெலிகந்த ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், நாட்டிலுள்ள 30 வைத்தியசாலைகளில் 255 பேர் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (சு-22)

## தனிமைப்படுத்தல்...

வைரஸ் பரவலைத் தடுக்கும் தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினனட் ஜெனரால் சவேந்திர சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

ஏற்கனவே 14 நாள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த அனைவரையும், அவரவர் வீடுகளில் மீள சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று வரை இலங்கையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் மட்டும் 3 ஆயிரத்து 415 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வெளியேறியிருந்தனர்.

இவர்களுக்குத் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்தமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன.

அவ்வாறு தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த அனைவரையும் மேலும் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் அளித்த சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் உடற்கூற்று வைத்திய நிபுணர் ஆனந்த விஜேநாயக்க,

இதுவரை தனிமைப்படுத்தல் மையங்களில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தோருக்கு வெறும் சான்றிதழ் மட்டுமே விநியோகிக்கப்பட்டது. இனிமேல் அந்தக் காலத்தை நிறைவு செய்யும் அனைவரையும் விசேட வைத்திய பரிசோதனைக்குட்படுத்துவோம். இதன்போது கொரோனா தொடர்பில் பரிசோதனைகளைச் செய்து அது குறித்த வைத்திய அறிக்கையையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

14 நாள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து வீடு திரும்பிய நிலையில், 7 நாள்களின் பின்னர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் தொற்றாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (சு-22)

## அத்தியாவசிய...

யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்கள் அதிகரித்த விலையில் பொருள்களை விற்பனை செய்வதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா ஆகியோர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இது தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்;ப்பாணத்தில் கடந்த 3ஆம் மற்றும் 4ஆம் திகதிகளில் ஒய்வூதியர்கள் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டனர். நகரத்தில் அதிகளவு மக்கள் கூடவில்லை. பொலிஸாரால் யாரும் கைது செய்யப்படவில்லை. கடந்த 5ஆம் திகதி அரசியல்வாதி ஒருவர் அறிக்கை வெளியிட்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படப் போவதாகவும், விலைகள் அதிகரிக்கப்படுவதாகவும் கூறியிருந்தார்.

இதனையடுத்து நேற்று 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் அதிகளவு மக்கள் கூடினர். பொருள்கள் வாங்குவதற்கு முண்டியடித்தனர். 10 பெண்கள் உள்பட 37 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் எத்தனை பேர் குடும்பத் தலைவன் தலைவிகளாக இருக்கக் கூடும். அவர்களின் குடும்பத்தில் பிள்ளைகளின் நிலை என்ன? அரசியல்வாதியின் பொறுப்பற்ற அறிக்கையால் மக்கள்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதுமான எவு பொருள்கள் இருக்கின்றன. மக்கள் பயப்படத் தேவையில்லை.

அறிக்கைகள் விடும் அரசியல்வாதிகள் போர்க் காலத்தில் எங்கு போயிருந்தனர். நாம் இங்கிருந்து இந்த மக்களுக்காக சேவை செய்தோம். இப்போதும் சேவை செய்கின்றோம். அரசியல்வாதிகள் பொறுப்பற்ற விதமாக நடக்கக் கூடாது என்றார். (ஒ.5,105)

## தேறுகின்றார்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்னும் சில நாள்கள் அல்லது கிழமைகளின் பின்னர் அவர் வீடு திரும்புவார். தொலைபேசியின் ஊடாக நேற்றுத் தொடர்பு கொண்ட கொழும்பு தொற்று நோய் மருத்துவமனைப் பணிப்பாளர் இதனை உறுதிப்படுத்தினார்.

கடந்த மார்ச் 22ஆம் திகதி கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தொற்றுநோய் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் உடல்நிலை தேறி சாதாரண விடுதிக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார். (ஒ.5)

## 16892...

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் நேற்று மாலை 6 மணி வரையான காலப் பகுதிக்குள் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணி முதல் நேற்று மாலை 6 மணி வரையான 6 மணித்தியாலத்துக்குள் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 768 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 249 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (சு-22)

## 18 பேருக்கும் கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி எல்லைக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 18 பேருக்கும் கொரோனா இல்லை என்று பரிசோதனை முடிவுகளில் தெரியவந்துள்ளது. கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களிடம் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது. கோப்பாயைச் சேர்ந்த 18 பேரின் மாதிரிகள் நேற்றுக் காலை சோதனைக்காகப் பெறப்பட்டிருந்தன. நேற்று மாலை அந்த முடிவுகள் வெளியாகின. 18 பேருக்கும் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ஒ.5)

## உணவு....

ட்டச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள் என்று மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் காரணமாக தொழில் பாதிப்படைந்த துணைக் கூலியாள்களில் எவராவது வருமானம் இன்றியோ அல்லது உண்ண உணவின்றியோ பட்டினியை எதிர்நோக்கினால் உடனடியாக மாவட்டச் செயலருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும்.

இவ்வாறு மாவட்டச் செயலரை நாடவிரும்பும் மக்கள் செயலகத்தின்
024 222 2235 , 024 222 2203
இலக்க தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு ஏற்படுத்தி விவரத்தை வழங்கினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-105)

## பிரிட்டன்...

ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

கொரோனா வைரஸால் பிரபலங்கள், அரசியல் தலைமைகள் என நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் முக்கியமானவர். கடந்த சில நாள்களுக்கு முன்னர் போரிஸ் ஜோன்சனுக்குக் கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் தனிமைப்படுத்தப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவரின் உடல்நிலை மேலும் மோசமடைந்ததைத் தொடர்ந்து தற்போது அவர் அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாதிப்பு....

மேற்பட்ட நாடுகளில் தற்போது வியாபித்துள்ளது. அமெரிக்கா, ஸ்பெய்ன், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், சீனா ஆகிய ஏழு நாடுகளும் கொரோனாவால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளாக உள்ளன. சமீப நாள்களாக தினமும் சராசரியாக சுமார் 60 ஆயிரம் நோயாளர்கள் புதிதாக இனங்காணப்படுகின்றனர். சுமார் 4,500 பேர் இறக்கின்றனர். இந்த நிலையில் நேற்று நள்ளிரவு 12 மணி வரையிலான நிலவரத்தின்படி உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 லட்சமாக அதிகரித்தது. அவர்களில் சுமார் 78 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொரோனா அவமானமல்ல

*உலகம் முழுதையும் ஏக காலத்தில் உலுக்கும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் தடையாக இருப்பது கொரோனாத் தொற்றாளர்களின் ஒத்துழைப்பின்மை தான். கொரோனா என்பது அதி ஆபத்தான நோய் என்றும், அது தமக்கு வருவது அவமானம் எனவும் பெரும்பாலானோர் கருதுகின்றனர். அதனால் தமக்கு கொரோனாவுக்குரிய அறிகுறிகள் இருந்தாலும் அதைப்பற்றி மூச்சுக்கூட காட்டாமல், எல்லோருடனும் வழமைபோல பழகி விட்டு, கடைசியில் நோய் முற்றிய பின்னரே மருத்துவமனைகளுக்கு ஓடுகின்றனர். அதனால் அவர்களையும் காப்பாற்ற முடியாமல் போய் விடுவதோடு, அவர்களைச் சூழ உள்ளவர்களும் கொரோனாத் தொற்றாளர்களாக மாறிவிடும் அபாய சூழலும் விரிவடையும்.*

*இன்னமும் கொரோனா பற்றிய முழு உண்மைகளையும் மருத்துவ உலகம் கண்டுபிடிக்கவில்லை. இப்போது தான் மெல்ல மெல்ல கொரோனாவின் இயல்பு, அது பரவும் வகை, அதன் உயிர் வாழும் காலம், தாக்கு திறன் என்பன பற்றியெல்லாம் மருத்துவத் துறையினர் கற்றுத் தெளிந்து வருகின்றனர். முதலில் மனிதன் மூலமே கொரோனா பயணித்து இன்னொரு மனிதனுக்குப் பரவுகின்றது என்றார்கள். ஆனால் பின்னர் அது சடப்பொருள்களிலும் தங்கி நின்று மனிதர்கள் மீது தொற்றக்கூடியது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருவருக்கு கொரோனா தொற்றினால் 14 நாட்களுக்குள் அதன் அறிகுறியை வைத்து பரிசோதனை மூலம் கண்டுபிடித்துவிடலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போதோ 21 நாட்களின் பின்னரும் சிலருக்குக் கொரோனா தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மனிதர்களுக்கு மட்டுமே கொரோனா வரும், முதியோர் தான் கொரோனாவால் கொல்லப்படுவார்கள் என்ற ஆரம்ப கட்டக் கூற்றுகள் கூட இப்போது பொய்க்கத் தொடங்கியுள்ளன. கொரோனா இதுவரை சரிவர வரையறை செய்யப்படாத ஒரு தொற்று. ஆனாலும் ஒரேயொரு வழி மூலம் அதனைக் கட்டுப்படுத்தலாம் என்பது மட்டுமே இதுவரை பொய்க்காமல் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொண்டு, தனிமைப்படுத்தலுக்கு உட்படுதல்தான்.*

*இந்த வழிமுறையைக் கைக்கொண்டே முதன் முதலாக கொரோனா இனங்காணப்பட்ட சீனாவின் வுகான் நகரம் இப்போது கொரோனாவின் பிடியில் இருந்து மீண்டிருக்கிறது. அதையே ஏனைய நாடுகளும் பின்பற்றி கொரோனாவைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருக்கின்றன. இலங்கையிலும் அதே வழியில் கொரோனாவைக் கட்டுப்படுத்தவே முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் வழமை போலவே கொரோனா என்பது தீண்டத்தகாத நோய் என்ற எண்ணம் போதிய ஒத்துழைப்பை கிடைக்க விடாமல் செய்கிறது. கொரோனா தொற்றியிருக்கலாம் எனச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்படுபவர்கள் கூட, அங்கிருந்து குற்றவாளிகளைப் போல பொலிஸுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு வேறு இடங்களுக்குத் தப்பிச் செல்கிறார்கள். உண்மையில் அவர்கள் தப்பிச் செல்லவில்லை. மாறாக தம்முடைய நோயை இன்னும் தீவிரப்படுத்துவதோடு, அப்பாவிகள் பலருக்கும் அந்த நோயைப் பரப்பும் காவிகளாக மாறி விடுகிறார்கள். அதேபோன்றுதான், தமக்கு கொரோனாவுக்குரிய அறிகுறிகள் இருந்தும் அதை மறைப்பவர்களும், கொரோனாத் தொற்றாளர் என இனங்காணப்பட்டவருடன் தமக்கு ஏதோ ஒருவகையில் தொடர்பு ஏற்பட்டது என்பதை மறைப்பவர்களும் கொரோனா நீண்டகாலம் இலங்கையில் இருப்பதற்கே வழிவகை செய்கிறார்கள்.*

*கொரோனா என்பது அவமானமல்ல. அதுவும் ஒரு சாதாரண நோயே. அதை மறைப்பதோ, அதில் இருந்து தப்பிப்பதாக நினைத்து சிகிச்சை பெறாமலும், சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகாமல் இருப்பதும் தான் அவமானத்துக்குரியவை. கொரோனாவை ஒழிக்க வேண்டுமாயின், தமக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வந்தாலே உடனடியாக சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுவதுடன், அதற்குரிய சோதனைகளையும் செய்தல் வேண்டும். அத்தோடு தன்னைச் சார்ந்தவர்களையும் அவ்விதமே செய்யத் தூண்டல் வேண்டும். எல்லோரும் இவ்வாறு பகிரங்கமாகக் கொரோனாவுக்கு எதிராகத் திரண்டால், கொரோனா இலங்கையை விட்டு விரைவிலேயே துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடியே போய்விடும்.*



# கொரோனா பரிசோதனை இயந்திரங்கள் இருப்பதோ 6: இயங்குநிலையில் 2 தான்!

**யாழ்ப்பாணம், ஏப். 8**

**கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சின் கீழ் உள்ள நாரா மற்றும் நக்டா ஆகியவற்றிடம் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளத்தக்க 6 பி.சி.ஆர் இயந்திரங்கள் உள்ள போதிலும் தற்போது இரண்டு மட்டுமே தொழிற்படும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

இலங்கை கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சின் கீழ் உள்ள நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை நிறுவனம் மற்றும் நக்டா எனப்படும் இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றிடம் உள்ள பி.சி.ஆர் உபகரணங்களை கொரோனாத் தொற்று நோயை பரிசோதிப்பதற்கு சுகாதாரத் துறையினருக்கு வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியிருந்தார். இவ்வாறு வழங்கப்பட்ட ஆலோசனையின் பேரில் குறித்த இரு நிறுவனங்களிலும் ஆராய்ந்தபோது அங்கு ஆறு இயந்திரங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இருப்பினும் ஆறு இயந்திரங்களில் தற்போது இரண்டு மட்டுமே இயங்கு நிலையில் உள்ளதோடு, எஞ்சிய நான்கும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ப-105)



## பிரிட்டனின் பிரதமருக்கு ரணில் ஆறுதல் கடிதம்

கொழும்பு, ஏப். 8

கொரோனா வைரஸ் காரணமாக அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் விரைவில் குணமடையைப் பிராத்திக்கின்றேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பிரிட்டன் பிரதமருக்கு ஆறுதல் தெரிவித்து அவருக்குக் கடிதமொன்றையும் ரணில் நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

கொரோனா வைரஸால் பிரிட்டனின் அரசியல் தலைவர்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். உச்சக்கட்டமாக பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சனும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

அவரது உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து அவர் நேற்றுமுன்தினம் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது உடல்நிலை கவலைக்கிடம் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நிலையில் போரிஸ் ஜோன்சனுக்கு ஆறுதல் தெரிவித்து ஜனாதிபதி கோத்தாபய முன்னதாகக் கடிதம் அனுப்பியிருந்த நிலையில் ரணிலும் தற்போது கடிதம் அனுப்பியுள்ளார். (ம-22)

## உண்மையை மறைத்தால் விளைவுகள் பாரதூரமாகும்

*சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை*

கொழும்பு, ஏப். 8

கொரோனா வைரஸ் தொற்றுடைய சிலர் உண்மையான தகவல்களை வழங்காதுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும், நோய் குறித்த சரியான தகவல்களை வழங்குவதே சாலச் சிறந்தது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். நோய் குறித்தான தகவல்களை மறைப்பதால் பெரிய விளைவுகள் ஏற்படக்கூடும் என்று எச்சரித்துள்ள அவர், மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார். (ம-22)

## பட்டதாரி பயிலுநர்களுக்கும் ரூ.10,000 நிதி உதவி வழங்குக

*முன்னாள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கச் செயலர் கோரிக்கை*

யாழ்ப்பாணம்,ஏப்.8

50 ஆயிரம் பட்டதாரி நியமனத் திட்டத்தின் பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டு பெயர் விவரம் வெளியிடப்பட்ட நியமனதாரர்களுக்கும் அவர்களின் தற்போதைய கால வறுமை நிலையைக் கருத்திற் கொண்டு அரசால் முதற்கட்ட நிவாரணமாக 10 ஆயிரம் ரூபா நிதியை வழங்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்வரவேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் செல்வராஜா ரமேஸ் கேட்டுள்ளார். (ப-50)

## அடிமாட்டு விலைக்கு கடலுணவுகள்

மன்னார்,ஏப்.8

ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக மன்னார் மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு சென்று வரும் வாகனங்களுக்கான கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது .

இதனைச் சாட்டாக வைத்து உள்ளூர் வியாபாரிகள் கடலுணவுகளை அடிமாட்டு விலைக்கு கொள்வனவு செய்து வருகின்றனர் என்று இலுப்பைக்கடவை மீனவ கிராமிய அமைப்பினர் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இலுப்பைக்கடவைப் பகுதி மக்கள் போரால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள், அன்றாடம் கடல் வருமானத்தை நம்பி வாழ்பவர்கள், தற்போதைய கொரோனாத் தொற்றுக் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால், எமது மக்கள் பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர்.

முன்பு வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மீன் எடுத்தவர்கள் நல்ல விலை கொடுத்து எடுத்தார்கள்.

தற்போது வெளிமாவட்ட மீனவர்கள் வருவதில்லை என்பதால் உள்ளூர் வியாபாரிகள் எங்களிடம் மிகக்குறைந்த விலைக்கே மீன், நண்டு, கணவாய் போன்றவற்றைக் கொள்வனவு செய்கிறார்கள். 700 ரூபாவுக்கு விற்க வேண்டிய கணவாயை எம்மிடம் இருந்து 380 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுகிறது என்று இலுப்பைக்கடவை மீனவ கிராமிய அமைப்பினர் சுட்டிக்காட்டினர். (ப-213)



## நகரில் புடைவைக் கடைகளை திறந்து பார்வையிட அனுமதி

*விரைவில் கிடைக்கும் என்று வர்த்தக சங்கம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர் ஊரடங்கு காரணமாக நகரிலுள்ள புடைவை விற்பனை நிலையங்கள் திறக்கப்படவில்லை. அவற்றை திறந்து பார்வையிடுவதற்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் என்று மாவட்டச் செயலர் உறுதியளித்துள்ளதாக, யாழ்ப்பாண வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது. ஊரடங்கு காரணமாக யாழ்ப்பாணம் நகரிலுள்ள புடைவைக் கடைகள் கடந்த மாதம் 20ஆம் திகதியின் பின்னர் திறக்கப்படவில்லை. அவற்றைத் திறந்து பார்ப்பதற்கு குறிப்பிட்ட மணி நேரமாவது அனுமதி வழங்குமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலருடன் நேற்றுப் பேச்சு நடத்தினோம்.

யாழ்ப்பாண நகரில் கஸ்தூரியார் வீதியில் உள்ள புடைவை விற்பனை நிலையங்களை குறிப்பிட்ட நேரத்திலும், ஸ்ரான்லி வீதியிலுள்ளவை இன்னொரு நேரத்திலும், மின்சார நிலைய வீதியில் உள்ளவை இன்னொரு நேரத்திலும், ஆஸ்பத்திரி வீதியில் உள்ளவை இன்னொரு நேரத்திலும் திறந்து பார்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள கருவாட்டு விற்பனை நிலையங்களை திறந்து பார்வையிடுவதற்கும் வர்த்தகர்கள் அனுமதி கோரியிருந்தனர். கருவாட்டு விற்பனையும் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால், அவர்களும் வீடு வீடாக விநியோகிப்பதற்கு பிரதேச செயலகங்களில் அனுமதி பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,106)

## சுவரைக் குடைந்து தப்பினர் கைதிகள்

*மீண்டும் கைது*

கொழும்பு,ஏப்.8

நீர்கொழும்பு சிறைச்சாலையில் சுவரைக் குடைந்து தப்பிச்சென்ற மூவர் மீண்டும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

அண்மையில் கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் அனைவரும் 14 நாள்கள் பிரத்தியேக அறைகளில் தனிமைப்படுத்தப்பட்டு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதன் பின்பே சிறை அறைகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேகநபர்களே சிறைச்சாலைச் சுவரைக் குடைந்து நேற்று அதிகாலை 12.10 மணியளவில் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து விரைவாகச் செயற்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸார், முப்படையினர் இணைந்து நடத்திய தேடுதலில் இரண்டு கைதிகள் சிறைச்சாலை அருகில் உள்ள மைதானத்தில் ஒளிந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் ஒரு கைதி நீர்கொழும்பு பகுதியில் அவரது வீட்டில் ஒளிந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட கைதிகள் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொள்கின்றனர். (க)

# ஊரடங்குக் காலத்தில் பொருள்கள் விற்பனை 3 மடங்காக அதிகரிப்பு




யாழ்ப்பாணம், ஏப்.8

**யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக விற்பனை செய்யப்படும் பொருள்களின் எண்ணிக்கை ஊரடங்கு அறிவிக்கப்பட்ட பின்னர் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.**

மக்கள் தமது வீடுகளில் தேவையானளவு பொருள்களை வாங்கி வைத்துள்ளனர். எமது வர்த்தகர்களிடம் ஒரு மாதத்துக்குத் தேவையான பொருள்கள் தற்போது கையிருப்பில் உள்ளன. இவ்வாறு யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் கோதுமை மா சராசரியாக மாதாந்தம் 3 ஆயிரம் மெற்றிக்தொன் விற்பனையாகும். ஆனால், ஊரடங்கு அறிவிக்கப்பட்ட பின்னர் 6 ஆயிரம் மெற்றிக்தொன் கோதுமை மா யாழ்ப்பாணத்தில் விற்பனையாகியுள்ளது. இதேபோன்று வேறு பல பொருள்களும் மூன்று மடங்கு வரையில் விற்பனையாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் 60 சதவீதமான மக்களிடம் ஒரு மாதத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கைவசம் உள்ளன.

ஆனால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களிடம் பணமும் இல்லை பொருள்களும் இல்லை. அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், என்று குறிப்பிட்டனர். (ஒ,5,105)



## கர்ப்பவதிகளே! அவசர தேவையா? 1990 க்கு அழையுங்கள்

கிளிநொச்சி, ஏப். 8

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கர்ப்பவதிகள் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ளபோது சிகிச்சை பெற நேரிட்டால், ஊரடங்கு என்று கருதி வீடுகளில் இருந்துவிடாதீர்கள். அவசர நோயாளர் காவுவண்டிக்கு (அம்புலன்ஸ்) 1990 என்ற இலக்கத்துக்கு அல்லது உங்கள் பிரிவுகளிலுள்ள குடும்பநல அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு மருத்துவமனைக்குச் செல்வதற்கான உதவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று மாவட்ட சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் ஊரடங்கு வேளையில் சிறுவர்கள், பிரசவத்தின் பின்னரான தாய்மார்கள் மற்றும் கர்ப்பவதிகள் எவருக்காவது காய்ச்சல் அல்லது வேறு நோய்நிலை ஏற்பட்டால் உடனடியாகத் தத்தமது பகுதி பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களை தொடர்புகொண்டு உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.தேவைப்படுமிடத்து அரச மருத்துவமனைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து உதவிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு காரணமாக மருத்துவமனைகளுக்கு தாமதமாகச் சென்ற பொதுமக்கள் சிலர் தற்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதனையடுத்தே மேற்குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்றது. எனவே கர்ப்பவதிகளும் இதைக் கவனத்தில் கொள்ளுங்கள் என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-21)

## மனித நேயம் அமைப்பின் உதவி

யாழ்ப்பாணம், ஏப் 8

கொரோனா தொற்று காரணமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தொடர் ஊரடங்கினால், நாளாந்த வருமானத்தை இழந்த குடும்பங்களின் அடிப்படை உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான, உலர் உணவுப் பொருட்கள் மனித நேயம் அமைப்பின் நிதிப் பங்களிப்பில், நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. புலோலி வடக்கு ஜே/412 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கும், அராலி ஐயனார் கோவிலடியில் ஜே/162 மற்றும் ஜே/163 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கும், தெல்லிப்பழை ஜே/239 கிராம சேவகர் பிரிவு, மானிப்பாய் ஜே/187 கிராம சேவகர் பிரிவு, அரியாலை ஜே/93 கிராம சேவகர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு குடும்பத்துக்கும் என 48 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ந)

## விவசாயம் செய்வதற்கென்று தோட்ட மக்களுக்கே தரிசு நிலங்கள் பகிர்வு

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தரிசு நிலங்களை தோட்ட மக்களுக்கே பகிர்ந்தளித்து விவசாய நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களில் இருந்து ஊர் திரும்புபவர்களும் இந்தமுயற்சியில் பங்கேற்கலாம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்டப்பகுதிகளில் எத்தனை ஏக்கர் தரிசு நிலம் உள்ளது, ஒருவருக்கு எவ்வளவு பகிர்ந்தளிக்கலாம் போன்ற விவரங்களை வழங்குவதற்கு 10 நாள்கள் அவகாசத்தை முகாமையாளர்கள் கோரினர். அந்த விவரங்கள் முன்வைக்கப்பட்ட பின்னர் விவசாயத்தை ஆரம்பிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். என்றார்.

இதேவேளை,"தோட்ட நிர்வாகங்கள் இடத்தை வழங்கும். விவசாயத் திணைக்களம் விதைகளை வழங்கும். தோட்டத்தில் வேலை இல்லாதவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும். நுவரெலியா மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்களிலும் விவசாயம் செய்தால் விளைச்சலை இரட்டிப்பாக்கலாம். நாட்டுக்குத் தேவையான மரக்கறி விநியோகத்தை வழங்கலாம்." என்று நுவரெலியா மாவட்டச் செயலர் தெரிவித்தார். (த-44)

# இரு வாரத்தில் பாதிப்பு இரு மடங்காக உயரும்

## கட்டுப்பாடுகளை கடுமையாக்குமாறு சுகாதார அமைச்சு வலியுறுத்து

*கொழும்பு,ஏப்.8*

**கொரோனா வைரஸ் பரவலானது எதிர்வரும் இரு வார காலத்துக்குள் இரு மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் மேலும் கடுமையாக்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.**

கொரோனா வைரஸ் குறித்து, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் மருத்துவக் கல்லூரி தலைவர்களது பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்துரையாடலில் பங்கேற்ற பேராசிரியர் இந்திக கருணாதிலகவால், பொதுமக்களுக்கு தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதை விடவும், எதிர்காலத்தில் அதிகளவான நிர்வாகம் அத்தியாவசியமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், இம் மாதம் 20 ஆம் திகதி வரை இரு வார காலத்துக்கு வைரஸ் தொற்று பரவலானது இரு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே 14 நாள்களுக்கு விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் மேலும் கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, குறித்த இரு வார காலத்துக்கும் மேலதிகமாக தேவையேற்படின் இதே போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ச எழுத்து மூலம் அறிவித்துள்ளார். அதற்கேற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

அத்தோடு, பொதுப் போக்குவரத்தின் போது சமூக இடைவெளியுடன் பயணிப்பதற்குரிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து, அவற்றை முழு நாட்டிலும் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலணிக்குத் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க இதன்போது தெரிவித்தார்.

விசேட வைத்தியர் மகேஷ் ஹரிஸ் சந்திர கருத்துத் தெரிவிக்கையில், "ஊரடங்குச் சட்டம் தற்காலிகமாக நீக்கப்படும் சந்தர்ப்பங்களில் அசௌகரியமின்றி பொது மக்கள் அத்தியாவசிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் பாதிக்கப்பட்டோரை இனங்காண்பதற்கும் முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்று கூறினார். இதற்குப் பதிலளித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, "புலனாய்வுத் துறையினர் ஊடாகத் தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு தொற்று நோயியல் பிரிவினால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

இதுவரையில் கொரோனா வைரஸ் சிகிச்சைகளுக்காக அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும், முல்லேரியா வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பிரிவை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். (க22)



# உலர் உணவு வழங்குதல்

முல்லைத்தீவு ,ஏப் 8

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கருவேலன்கண்டல்,மானுருவி, பரிசன்குளம் போன்ற கிராமங்களில் நாளாந்த வருமானம் பெறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 141 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. லண்டனில் வசித்து வரும் சமூகசேவையாளர் பீற்றர் சிறி என்பவரின் நிதிப் பங்களிப்பில் முல்லைத்தீவு நெடுங்கேணி கரடிப்புலவு இளைஞர்களினால் , இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ந 222)



# குருதிக்கொடை வழங்குதல்

சாவகச்சேரி, ஏப். 8

சாவகச்சேரி கத்தோலிக்க பங்கைச் சேர்ந்த இளைஞர் மன்றத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குருதிக் கொடை வழங்கினர்.

இளைஞர் மன்றத்தினர் வருடாவருடம் தவக்கால வேளையில், சாவகச்சேரி லிகோரியார் ஆலய வளாகத்தில் யாழ். போதனா மருத்துவமனை குருதிக் காப்பகத்திற்கு குருதிக் கொடை வழங்கி வருகின்றனர். இவ்வருடம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக குருதிக்கொடை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், குருதி தேவையென யாழ் போதனா மருத்துவமனையினர் அறிவித்ததையடுத்து, பங்குத் தந்தையின் ஏற்பாட்டில் இளைஞர்கள் மருத்துவமனைக்குச் சென்று குருதிக் கொடை வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# கொரோனா நிதியம் 380 மில்லியன் ரூபா

கொழும்பு, ஏப். 8

கொரோனா சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்துக்கு மேலும் 66 மில்லியன் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அதன் மூலமாக நிதியத்தின் வைப்பு மீதி 380 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும தனது அமைச்சுப் பதவிக்கு உரித்தான ஏப்ரல் மாத சம்பளத்தையும், அமைச்சர் காமினி லொக்குகே 10 மில்லியன் ரூபாவையும் ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் அன்பளிப்புச் செய்தனர்.

தேசிய லொத்தர் சபை 25 மில்லியன் ரூபாவையும், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கை மின்சார சபை பொறியியல் சங்கம் ஆகியன தலா 2.5 மில்லியன் ரூபாவும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு 02 மில்லியன் ரூபாவையும், மெலிபன் பிஸ்கட் மெனுபெக்சரீஸ் நிறுவனம் 10 மில்லியன் ரூபாவையும், மாத்தறை பௌத்த பாதுகாப்பு சபை ஒரு மில்லியன் ரூபாவையும், நேசர்ஸ் பியுட்டி கிரியேசன்ஸ் நிறுவனம் 5 மில்லியன் ரூபாவையும் நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்துள்ளன.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் 85737373 என்ற இலக்கத்தையுடைய 'கொவிட் 19' கொரோனா சுகாதார சமூகபாதுகாப்பு நிதியத்துக்கு உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொரு நபரும் அன்பளிப்புகளை அல்லது நேரடி வைப்புகளைச் செய்ய முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்துக்குச் செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்ட திட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியை வைப்பிலிட முடியும்.

0112354479, 011354354 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) கே.பீ. எகொடவெலே அவர்களை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (கு)

# தம்புள்ளவுக்கு பூட்டு

கொழும்பு,ஏப்.8

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக, தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை மறு அறிவித்தல் வரை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. (க)






# வடமராட்சி கிழக்கில் உலருணவுப் பொருள்

யாழ்ப்பாணம், ஏப்.8

சட்டத்துக்கும், மனித உரிமைக்குமான நிறுவனத்தால், யாழ்ப்பாணம் மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சட்டத்துக்கும், மனித உரிமைக்குமான நிறுவனத்தினர் இரண்டு குழுக்களாகப் பிரிந்து இந்த உணவுப் பொருள்களை வழங்கினர். யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே /62,68, 69, 75 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வறுமைக்குட்பட்ட மக்களுக்கும், வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே /430, 431 ஆகிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் இவ்வாறு உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஜ-20)

உதயன்
newuthayan.com

ஓர் அகநோக்கு 05

# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம்:

**நாம் எல்லோரும் வீட்டில் இருக்கிறோம். நீண்ட காலங்களுக்குப் பிறகு வாழ்க்கையில் நாம் ஒன்றாக இருக்கிறோம். ஆயினும், இக்காலப் பகுதியில் கணவன் – மனைவியினரிடையே பிரச்சினைகள் அதிகரித்திருக்கின்றன என்றும் செய்திகள் வருகின்றன. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

Dr. சா. சிவயோகன்
உளமருத்துவ நிபுணர்

நானும் அதுபற்றி அறிந்திருக்கிறேன். தமது வழமையான செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு, தற்பொழுது அல்லும் பகலும் வீடுகளில் இருக்கும் மனிதர்களுக்கு, அந்தப் புதிய சூழ்நிலைக்கு இசைவாக்கம் அடைவதில் சில சவால்கள் ஏற்படத்தான் செய்கின்றன. முக்கியமாக, வழமைக்கு மாறாக, கணவனும் மனைவியும் அதிக நேரம் அல்லது முழுநேரமும் வீட்டில் இருப்பதனால் அவர்கள் தங்களுக்குள் இடைவினையாற்றும் நேரமும் அதிகரித்திருக்கின்றது. இது பொதுப்படியாக ஆனந்தமான ஒன்றாக இருந்தாலும், சில வேளைகளில் இந்த இடைவினைகளின்போது, கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாத யதார்த்தமாக அமைந்து விடுகிறது. இந்தக் கருத்து முரண்பாடுகள் விகாரமடைகின்ற பொழுது, அவை பிரச்சினைகளாக, வன்முறைகளாக வெளிப்படுகின்றன.

ஒரு மணவாழ்க்கையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு, முதலில் திருமணம் என்றால் என்ன என்பதனை நாம் சற்றுப் புரிந்து கொள்ள வேண்டும். எளிமையான வார்த்தைகளில் சொல்வதாயிருந்தால், திருமணம் என்பதனை “இரண்டு தனிமனிதர்கள், பல தேவைகளுக்காக, நீண்டகாலம் ஒன்றிணைந்து வாழ்வதற்கு வழிவகுக்கும் ஓர் ஏற்பாடு” என விளங்கப்படுத்தலாம். இந்த விபரிப்பில் இருக்கும் சில சொற்கள் பற்றிய புரிதல் முக்கியமானது.



முதலாவதாக, திருமண பந்தத்தில் இணைகின்ற இரண்டு பேரும் இரண்டு தனிமனிதர்கள் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அவர்கள் வெவ்வெறு இடங்களில் பிறந்து, வெவ்வெறு வளர்ப்பு முறைகள் ஊடாக வளர்ந்து, வெவ்வேறு வாழ்க்கை அனுபவங்களைப் பெற்று, வெவ்வேறு விழுமியங்களை வளர்த்துக் கொண்டு, வெவ்வேறு விருப்பு வெறுப்புகளோடு இருக்கின்ற இரண்டு தனித்துவமான மனிதர்கள். இவ்வாறு வேறுபட்ட குணாதிசயங்கள் உடைய இரண்டு பேர், திருமணம் என்கிற ஒரு பந்தத்தில் இணைவதனால் தமது குணவியல்புகளை மாற்றிக் கொண்டு விடுவார்கள் என நாம் எதிர்பார்க்கலாமா? இல்லை. அவர்களில் சிலர் முடியுமானளவு மற்றையவரின் குணவியல்புகளைப் பொறுத்துக் கொண்டு, சகித்துக் கொண்டு, தமக்கும் மற்றவருக்கும் இடையே இருக்கின்ற சில பொதுமையான விடயங்களை அடையாளங்கண்டு, அவற்றில் திருப்தியுறுபவர்களாக வாழ்வார்கள். வேறு சிலர், தங்களது சுய அடையாளங்களை இயலுமானளவுக்கு மறைத்துக் கொண்டு, மற்றையவரின் குணாதிசயங்களை முழுமையாக ஏற்றுக் கொண்டு வாழ்வதுபோல் பாங்கு செய்து, தமது வாழ்க்கையைத் தொடர்வார்கள். இந்த இரண்டு வகைப்பட்டவர்களும் தமது திருமண வாழ்க்கை நீண்டகாலம் நிலைத்து நிற்க வேண்டும் எனும் விருப்பினை அடிப்படையாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருப்பார்கள்.

துர்ப்பாக்கியமாக, இன்னுமொரு வகையினர் திருமணமானதன் பின்னர், தமது வாழ்க்கைத் துணைவர் தாம் விரும்பியபடி மாறவேண்டும் என எதிர்பார்த்து, அதற்காகப் பாடுபட்டு, சாம பேத தான தண்ட முயற்சிகள் செய்து, தினம் தினம் தோற்றுப் போய்க்கொண்டிருப்பார்கள். இந்த வகைப்பட்டவர்கள் தாம் தோற்றுப் போவது மாத்திரமல்லாது, தம்முடன் இணைந்த மற்றவரையும் நிம்மதியாக இருக்கவிடாது பார்த்துக் கொள்வதில் குறியாக இருப்பார்கள். இவர்களின் திருமண வாழ்வானது இயல்பானதாக இருக்காது சிரமங்கள் நிறைந்தவையாக மாறிவிடுகிறது.

நாம் திரும்பவும் முதலில் பார்த்த ஒரு விடயத்தை நோக்கிக் கவனத்தைக் குவிப்போம். திருமணம் என்பது இரண்டு தனிமனிதர்கள் சம்பந்தப்பட்டது. எனவே, ஒரு திருமண வாழ்வு தெளிந்த நீரோடை போல் ஓடுவதற்கு, திருமண பந்தத்தில் இணைந்த இருவரும் மற்றவர்களின் தனித்துவமான இயல்புகளையும், குணாதிசயங்களையும் ஏற்றுக் கொள்வது அவசியமானது. முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் சகிப்புத் தன்மையோடாவது இருப்பது அவசியம்.

இரண்டாவதாக, திருமணம் என்பது பல தேவைகளுக்கான ஒன்றிணைவு என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். இந்தத் தேவைகள் பலவகைப்பட்டனவாக இருக்கின்றன. உணர்வுத் தேவை, உடற் தேவை, பொருளாதாரத் தேவை, பாதுகாப்புத் தேவை, சமூகக்காப்புத் தேவை என்பவற்றோடு, சந்ததிக் கடத்துகை, குடும்ப அடையாளம், வாழ்க்கைப் படிநிலைகள் ஊடான பயணம் போன்ற ஏனைய பல தேவைகளும் திருமண வாழ்வு எனும் நடைமுறையில் புர்த்தி செய்யப்படுகின்றன. ஒரு மணவாழ்க்கையில், இவ்வாறான பல தேவைகளும், அவை பரஸ்பரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கடப்பாடுகளும் பொதிந்திருக்கின்றன.

இங்கு பரஸ்பரம் என்பதன் அர்த்தமும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். ஒருவர் தனது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால் சரி என்று கருதிக் கொள்வது சரியல்ல. மற்றவரின் தேவைகளைப் பற்றி அறிந்திருப்பதுவும், அல்லது மற்றவருக்கும் சில தேவைகள் இருக்கலாம் என்ற நினைப்பைக் கொண்டிருப்பதுவும் திருமண வாழ்க்கையை இனிதாக்குவதற்கு உதவுகின்றன. பல தம்பதியினர் தாம் ஏன் இணைந்து வாழ்கின்றோம் என்பது தெரியாமலே, தாம் வரித்துக் கொண்ட மணவாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருப்பதுவும், வாழாதிருப்பதுவும் வேதனையானது. மூன்றாவதாக, திருமணம் என்பது நீண்ட காலம் இணைந்து வாழ்வதற்காகச் செய்யப்படும் ஓர் ஏற்பாடு என்னும் விடயம் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒருவர் மற்றவருடன் நீண்ட காலம் இணைந்து வாழ்கின்ற பொழுது, சிலவேளைகளில், ஆரம்ப காலங்களில் இருந்த உற்சாகமான மனநிலை மறைந்து, ஒரு சலிப்புத் தன்மை ஏற்படலாம். இவ்வாறு, மணவாழ்க்கையில் ஏற்படுகின்ற தற்காலிகமான சலிப்புகளை ஓர் இயல்பான விடயமாகப் புரிந்து கொள்வது முக்கியமானது. ஆனால், அந்தச் சலிப்புகளிலிருந்து மீண்டு, வாழ்க்கையைப் புத்துணர்ச்சி மிக்கதாக மாற்றுவதற்குரிய முயற்சிகளை கணவன் மனைவி இருவரும் மேற்கொள்ள வேண்டியது அவசியம். புத்தாக்கத் திறனோடமைந்த சிந்தனைகள் இதற்குப் பெரிதும் உதவி செய்கின்றன.

திருமணம் என்பதன் அடிப்படைகளை நாம் புரிந்து கொள்வோமேயானால், ஒவ்வொருவருடைய திருமண வாழ்விலும் ஏற்படுகின்ற அழுத்தங்கள், நெருக்கீடுகள், சிக்கல்கள், பிடுங்கல்கள், பிரச்சினைகள் போன்றன ஏற்படுவதற்கான காரணங்கள் எவை என்பதனையும் விளங்கிக் கொள்ளலாம். தமது பிரச்சினை எது என்பது பற்றியும், அதற்கு அடிப்படையாக இருக்கும் மூல காரணங்கள் எவை என்பது பற்றியும் விளங்கிக் கொள்ளுதல் என்பது, ஒருவர் தமது பிரச்சினைகளில் இருந்து வெளிவருவதற்கான பாதையின் முக்கியமான முதல் அடிகளாக இருக்கும். மணவாழ்க்கையில் காணப்படுகின்ற பெரும்பான்மையான பிரச்சினைகள், அந்த வாழ்க்கையில் இணைந்து கொண்ட ஒருவர் மற்றையவரைத் தாம் விரும்புவது போன்று மாற்ற முயற்சிப்பதனால் உருவாகின்றன. உண்மையில், அவ்வாறு ஒருவரை ஒருவர் மாற்ற முயற்சிப்பது என்பது முட்டாள்தனமானது. ஒருவருடைய சுயத்தைக் கேள்விக்குறியாக்குவதும், அவரது தனித்துவத்தை இழக்கச் சொல்லி அவரை வற்புறுத்துவதும் நியாயமாகாது. சிலர் மாறுவதுபோல் நடிக்கலாம். ஆனால், அது நிலையான மாற்றமாக இருக்காது. மாற்றத்திற்கான வற்புறுத்தல்கள் அதிகரிக்கின்றபோது, ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பல விடயங்கள் இரகசியமாக நடைபெற வேண்டிய தேவை ஏற்படும். இது ஏற்கனவே உருவாகியிருக்கும் முரண்பாடுகளை மேலும் மோசமாக்கிவிடும். மணவாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இருவரும் தமது விருப்பு வெறுப்புகளையும், நம்பிக்கைகளையும் பற்றித் திறந்த மனதோடு கலந்துரையாடுவதும், பின்பு பொதுவான ஒரு தீர்மானத்தின்படி தமது வாழ்க்கையை முன்நகர்த்துவதும் ஆரோக்கியமானது.

பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற இன்னுமொரு முக்கிய விடயமாக, மணவாழ்க்கையில் ஈடுபடும் இருவரும் தமது வாழ்க்கைத்துணையின் உண்மையான தேவைகள் பற்றி அறியாதிருப்பது அமைந்திருக்கின்றது. ஒருவருடைய தேவைகள் என்ன என்பதைப் பற்றிய ஊகங்கள் எப்போதும் சரியாக அமைந்து விடாது. ஒருவருடைய தேவைகளை நிறைவேற்ற முயலுகின்றபோது, அவரது தேவைகள் பற்றிய சரியான புரிதலும், தீர்க்கமான அறிவும் அவசியமாகின்றது. தேவைகள் பற்றிய புரிதலுக்கு மனந்திறந்த உரையாடல்களும், பழைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களும் உதவி செய்யும்.

பொதுவாக ஆண்களுடைய தேவைகளும், பெண்களுடைய தேவைகளும் சற்று வேறுபட்டனவாக அமைந்திருக்கின்றன. இந்த பால்நிலைப்பாற்பட்ட வேறுபாட்டைப் புரிந்து கொள்வது திருமண வாழ்க்கையில் மிகவும் அவசியமானது. இந்தப் புரிதலானது, ஒருவரை அவருடைய நிலையிலிருந்து விளங்கிக் கொள்வதற்கு உதவுகின்றது. அத்துடன், பொருத்தமில்லாத எதிர்பார்ப்புகளை உருவாக்குவதிலிருந்தும், அந்த எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போய்விடும் பொழுது ஏற்படுகின்ற ஏமாற்றங்களிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இந்தப் புரிதல் உதவுகின்றது. ஒவ்வொரு தம்பதியியினரும் தமது வாழ்க்கையை அறிவால் மட்டுமல்லாது, முயன்று தவறும் அனுபவங்களாலும் கற்றுக் கொள்வதற்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும். மணமுறிவின் எல்லை வரைக்கும் செல்லுகின்ற பல மணவாழ்க்கைகளின் பின்புலத்தில் மணவழி உறவுகளின் தலையீடுகள் இருக்கின்றமையை நாம் அவதானிக்கலாம். ஒரு திருமணத்தின் காரணமாக உருவாகும் மணவழி உறவுகள், தேவைப்படும் பொழுதுகளில் மட்டும் தமது ஆலோசனைகளையும், ஆதரவையும் கொடுப்பதோடு நிறுத்திக் கொள்வது நல்லது.

ஒவ்வொருவரும் தமக்கேயுரித்தான பல்வேறு திறமைகளோடும், சிற்சில பலவீனங்களோடும் இருக்கிறார்கள். மணவாழ்க்கையிலும் இது புரிந்து கொள்ளப்பட வேண்டும். கணவன் மனைவி இருவரும் தம்மைச் சமமானவராக உணர்ந்து கொள்வதுவும், தமக்கு இயல்பாக கைவரக்கூடிய விடயங்களில் குடும்பத்துக்கான தலைமைத்துவத்தை வழங்குவதும், நீண்டகால நோக்கில் நன்மைகளை அளிக்கக்கூடிய செயற்பாடுகளாகின்றன.

தற்பொழுது கொவிட்19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வீட்டில் இருக்கும் சூழல் இதுவரை காலமும், நிற்க இருக்க நேரமில்லாது ஓடிக் கொண்டிருந்த வாழ்க்கையில் ஓர் இடைத்தங்கு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. மணவாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருக்கும் தம்பதியினர், இந்தக் காலப்பகுதியில், வயது வித்தியாசம் பாராது, தமக்குக் கிடைத்திருக்கும் ஓய்வைப் பயன்படுத்தி, தமது திருமண வாழ்வை மீட்டிப் பார்த்துக் கொள்வது அவசியமானது.

கடந்த காலத்தை மீட்டிப் பார்த்தல் என்பது கசப்பான அனுபவங்களையும், பிரச்சினைகளையும் பற்றி நினைத்துக் கொள்தல் என அர்த்தம் கொள்ளக் கூடாது. அது இதுவரை காலம் வாழ்ந்த வாழ்வின் இன்பமான கணங்களையும், இணைந்த சாதனைகளையும், இடர்கடந்த வல்லமைகளையும் பற்றிக் கூட்டாக இரை மீட்டுவது. இவ்வாறான ஒரு சாதனை, பயிற்சி தம்பதியினரிடையேயான ஒத்திசைவை அதிகரிப்பதோடு, அவர்களின எதிர்காலத்தை வண்ண மயமாக்குவதிலும் உதவும்.

இந்த அரிதான, ஆபத்தான, இடர்மிகுந்த தருணத்தில் கிடைத்திருக்கும் ஓர் இடைஓய்வு காலத்திலாவது, நாம் எமது வழமையான சிந்தனைப் போக்குகளிலிருந்து சற்று மாறி ஒருவர் சம்பந்தமான நிறைகளையும், நமக்கு அமைந்திருக்கும் வாழ்க்கையின் அற்புதமான பக்கங்களையும் பரிமாறிக் கொண்டால் என்ன? தற்பொழுது உலகில் வழமைக்கு மாறான பல விடயங்கள் நடந்தேறுகின்றன. நாங்களும் எங்களது வழமைகளிலிருந்து மாறி, புதியதோர் உலகை வரவேற்போம்.

# ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதற்கான புதிய முறைமை

**கொழும்பு, ஏப். 8**

**ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான புதிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.**

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்குடனும் மக்கள் தேவையற்ற வகையில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையிலும் அரசால் அவ்வப்போது ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்படுகின்றது.

அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அதிகளவானவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் ஒன்றுகூடுவது கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பெரும் தடையாகும்.

எனவே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பணிப்புரையின் பேரில் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவால் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான புதிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் 4 முறைமைகளின் கீழ் வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமை அலுவலகம், மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம், தொகுதிக்குப்பொறுப்பானபொலிஸ் அதிகாரி அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களின் ஊடாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் கீழ் வரும் 50 ஊழியர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்கள்பொலிஸ்தலைமை அலுவலகத்தால் வழங்கப்படும்.

மேல் மாகாணம் கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் கீழ் வரும் 50 ஊழியர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களை கொண்ட நிறுவனங்களுக்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் வழங்கப்படும்.

மேல் மாகாணம் தவிர்ந்த மாகாணங்களில் உள்ள 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் வழங்கப்படும்.

அந்தந்த பொலிஸ் பிரிவுகளின் கீழ் உள்ள 10 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட மற்றும் 50க்கும் குறைவான ஊழியர் எண்ணிக்கையைக் கொண்ட நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்படும்.

பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திலுள்ள 10க்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அனுமதி அந்தந்தப் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே விசேட மனிதாபிமான காரணங்களின் அடிப்படையில் ஆட்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குப் பொலிஸ்நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்களை எந்த அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதை ஏலவே உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார். அனுமதிப்பத்திரங்களுக்கு மிகவும் நியாயமான காரணத்துடன் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் உள்ளிட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்குத் தமது தொழில் அடையாள அட்டையை ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்த முடியும். எனினும், தொழில் நிமித்தமின்றி தமது ஊழியர் அடையாள அட்டையை துஷ்பிரயோகம் செய்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் புதிய முறைமை உள்ளிட்ட சுற்று நிருபத்தை www.police.lk என்ற இணையத்தளத்திலும் அரச தகவல் திணைக்கள இணையத்தளத்திலும் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (22)



## பொலிஸார் தடியடி

மட்டக்களப்பு,ஏப்.8

மட்டக்களப்பு மாநகர முதல்வரால், பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், பழவகைக் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளைத் திறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும்அதனை மீறி நேற்று முன் தினம் திறக்கப்பட்ட கடைகளை மாநகர முதல்வர் நேரில் சென்று பூட்டுமாறு பணித்தார். அத்துடன்திறக்கப்பட்ட கடைகளுக்குள் நின்ற மக்களையும் பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டு அங்கிருந்து துரத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கோடு சன நெரிசலைக் கட்டுப்படுத்தும் விதமாக மட்டக்களப்பு மாநகர சபைக் குட்பட்ட பகுதிகளில் வீதியோர வியாபாரங்களுக்கு முற்றுமுழுதாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து, மாநகர முதல்வரின் அறிவிப்பை மீறி, மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் துணி வியாபாரக் கடைகள் மற்றும் ஏனைய கடைகள் திறக்கப்பட்டதையடுத்து அங்கு சனக்கூட்டம் சமூக இடைவெளியைப் பேணாது திரண்டது.

இதனையடுத்து அந்தப்பகுதியில் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து ,மாநகர சபை முதல்வரின் அறிவிப்பை உதாசீனம் செய்த கடைகளை மூடவைத்தனர். அதேவேளை, மாநகர சபை உத்தியோகத்தர்கள் வீதியோரங்களில் வியாபாரம் செய்தவர்களின் பொருள்களையும் எடுத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)





## இந்தியாவிலிருந்து மருந்துகள் வந்தன

கொழும்பு,ஏப்.8

இலங்கையில்கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க, இந்திய மத்திய அரசாங்கம் ஒரு தொகுதி மருந்துகளை அனுப்பி வைத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உத்தரவுக்கு அமைவாக இந்தியாவுக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் ஒரு தொகுதி மருந்துகள் இலங்கைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

இந்திய அரசாங்கத்தின் உதவிக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (க)

## உலகத் தமிழ் பண்பாட்டு மையம் நலிவுற்றோருக்கு இன்று உதவி

யாழ்ப்பாணம், ஏப்.8

ஊரடங்கால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற பிரதேசங்களில் வறுமையினால் வாடும் முதியோருக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும், ஏனைய தொழில் அற்று கஷ்டப்படும் வறிய நிலையில் இனங்காணப்படும் மக்களுக்கும் யாழ்ப்பாணத்தை தலைமையகமாக கொண்டு செயற்படும் உலகத் தமிழ் பண்பாட்டு மையம் இன்று முதல் யாழ் மாவட்ட மட்டத்தில் உதவித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் ஸ்தாபகத் தலைவர் மாவை சோ. தங்கராஜா மற்றும் கனடா நாட்டின் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் சட்டத்தரணி அ. இளஞ்செழியன் ஆகியோரின் நேரடி நிதிப்பங்களிப்பில் உலர் உணவுப் பொதிகள் நலிவுற்றோரை நோக்கி இன்று புதன்கிழமை காலை முதல் வழங்கி வைக்கப்படவுள்ளன.

உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் தலைமைச் செயலகத் தலைவர் பேராசிரியர். தி;. வேல்நம்பி தலைமையில் வலி. வடக்குப்பிரதேச செயலாளர் ஆ. சிவசிறி வழங்கிய பட்டியலின் பிரகாரம் இன்று காலை வலி வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு ஆகிய பிரதேசங்களில் இருந்து முதற்கட்ட நிவாரணப்பணி இடம்பெறும் என உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் நிர்வாகச் செயளாளர் மாவை சோ. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ப-50)

## 30 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்



வவுனியா,ஏப்.8

ஊரடங்கால் பாதிக்கப்பட்ட வவுனியா ஆவரந்துலாவ, ஒலுக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

ஜீவஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஏற்பாட்டில் லண்டன் காக்கும் கரங்கள் அமைப்பினர் இந்த உதவிகளை வழங்கியிருந்தனர்.(ஐ-222)

## பச்சிலைப் பள்ளியில் 75 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கொடிகாமம், ஏப். 8
ஊரடங்குச் சட்டத்தால் உணவின்றிக் கஷ்டப்படும் குடும்பங்களுக்கு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் உணவுப் பொருள்கள் வழங்கினர்.
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அல்லிப்பளை கிராம அலுவலர் பிரிவில் 30 குடும்பங்களுக்கும், புலோப்பளை மேற்கில் 25 குடும்பங்களுக்கும் அரசர்கேணி பிரிவில் 20 குடும்பங்களுக்குமாக 75 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன.
முதற்கட்டமாக பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கத்தின் புலம்பெயர் இணைப்பாளர் த.லோகநாதனின் அனுசரணையுடன் இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தலைவர் சி.சிவப்பிரகாசம், பொருளாளர் செ.சரவிந்தன், உபசெயலாளர் திருமதி சுதா மோகனதாஸ், அல்லிப்பளை புலோப்பளை மேற்கு கிராம அலுவலர் திருமதி சு.கஸ்தூரி, அரசர்கேணி கிராம அலுவலர் செல்வி ம.அனோஜா மற்றும் அலுவலர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர். (து-159)





### விலைப்பட்டியல் இல்லாமல்
# மரக்கறி விற்பனைக்கு தென்மராட்சியில் தடை

யாழ்ப்பாணம், ஏப். 8
தென்மராட்சி பிரதேசத்தில் பிரதேச செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத நடமாடும் விற்பனையில் ஈடுபடும் வாகனங்களை வியாபாரத்தில் ஈடுபட பிரதேச செயலர் தடை விதித்துள்ளார்.

பிரதேசத்தில் வாகனங்கள் மூலம் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடவுள்ளவர்கள், தாம் விற்பனை செய்யவுள்ள பொருள்களின் நியாயமான விலைப் பட்டியலை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரின்சிபார்சுடன்0777443031 என்னும் இலக்க வைபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
பிரதேச செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விலைப்பட்டியலை வாகனத்தின் இரு பக்கங்களும் காட்சிப்படுத்திய பின்னரே வியாபாரத்தில் ஈடுபட வேண்டும். பொருள்களின் விலைகளில் மாற்றம் ஏற்படின் மீளவும் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமல் வியாபாரத்தில் ஈடுபடும் வாகனங்களின் விவரங்களை பிரதேச செயலகத்துக்கு அறிவிக்குமாறு கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோருக்கு பிரதேசசெயலர் திருமதி உஷா சுபலிங்கம் உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## கோவில் பரிபாலன சபையினர் 100 பேருக்கு போசாக்கு உணவு

யாழ்ப்பாணம், ஏப். 8
நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையினர், தெரிவு செய்யப்பட்ட கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் உள்ள 100 குடும்பங்களுக்கு போசாக்கு உணவு வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் அடியவர்களுடையதும் கோவில் நிதிப் பங்களிப்புடனும் பொருள்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
முதற்கட்டமாக, கோவில் கும்பாபிஷேக (பங்குனி உத்தரம்) தினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை, கரவெட்டிப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் ஒத்துழைப்புடன் 100 குடும்பங்களுக்கும் போஷாக்கு உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-422)

# சுகாதாரப் பணியாளர்கள் மதிக்கப்படவேண்டியோர்

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 8
"உலகவாழ் மக்கள் சுகாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில், நாட்டையும், மக்களையும் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அனைத்து சுகாதார சேவையாளர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்" என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
பிரதமர் அலுவலகம் நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
"கொரோனா வைரஸ் தாக்கம் முழு உலகத்துக்கும் சவால் விடுத்துள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டு மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தங்களின் பாதுகாப்பை பொருட்படுத்தாமல் 24 மணித்தியாலமும் சேவையாற்றும் சுகாதார சேவையாளர்களுக்கு இலங்கைவாழ் மக்கள் அனைவரும் கடன்பட்டுள்ளோம்.
கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு எதிராகப் போராடும் உலகவாழ் சுகாதார சேவையாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் சேவையை முன்னெடுக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும். மனத் தைரியமும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். எனப் பிரார்த்திக்கின்றேன்" என்றுள்ளது. (த-22)

# ஆதரவற்றோருக்கு தங்குமிடம்

வவுனியா,ஏப்.8
வவுனியா நகரின் தெருவோரங்களில் தங்கியிருந்த ஆதரவற்றோர் ,வவுனியா குடியிருப்பு காலாசார மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டனர்.
வவுனியா பிரதேச செயலரின் அனுமதியோடு சமூக ஆர்வலர்களான ,விக்னா ,சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் கென்னடி,பிரதேச கலாசார உத்தியோகத்தர் பிரதீபன் ஆகியோர் இணைந்து இந்த செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர்.
நகரசபையின் பஸ் மூலம் அவர்கள், குடியிருப்பு கலாசார மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டனர்.
முதற்கட்டமாக 8 பேர் குறித்த மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டதுடன், ஏனையவர்களையும் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
அவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-110)



# நிவாரணப் பணிகள் நானாட்டானில் பூர்த்தி

### பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார், ஏப். 8
நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் அவசர நிவாரணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என்று பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார்.
கர்ப்பிணித்தாய்மார், சிறப்புத் தேவையுடையோர் மற்றும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன என்று தெரிவித்தார்.
நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் 296 கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், எழுபது வயதைக் கடந்த 532 முதியவர்களுக்கும் தலா 4ஆயிரத்து 900ரூபா பெறுமதியான பொதிகளும், 146 சிறப்புத் தேவையுடையோருக்கும் நேற்று நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
மேலும் அரச சார்பற்ற, தொண்டு நிறுவனங்கள் மனிதநேயப் பணியாளர்களூடாகவும் மக்களுக்கு அவசர நிவாரணப் பணிகளை பிரதேச செயலகம் ஊடாக வழங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-213)

#### கந்தரோடையில்
## 190 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

கொடிகாமம், ஏப். 8
கந்தரோடை ஜே/20[illegible] கிராம அலுவலர் பிரிவில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தெரிவுசெய்ய[illegible]பட்ட190 குடும்பங்களுக்கு ஒரு கிழமைக்குத் தேவையான உல[illegible] உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.
சுன்னாகம் கந்தரோடை பகுதியில் பிரதேசசபை உறுப்பினர் யோகாதே[illegible]வியின் ஏற்பாட்டில், கந்தரோடை வாழ் நோர்வே மக்கள் ஒன்றியத்தின் நிதியில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# ஆபிரிக்கர்கள் என்றால் பரிசோதனை எலிகளா?

## அவர்களிடம் கொரோனா தடுப்புமருந்தை பரிசோதிக்க உலக சுகாதார அமைப்பின் தலைவர் கடும் எதிர்ப்பு

நியூயோர்க், ஏப்ரல் 8

கொரோனாவுக்கான தடுப்பு மருந்தை ஆபிரிக்க மக்களிடம் சோதித்துப் பார்க்கலாம் என்று பிரான்ஸ் ஆய்வாளர்கள் இருவர் தெரிவித்த ஆலோசனையை நிராகரித்தார் உலக சுகாதார அமைப்பின் தலைவர் கேப்ரியேசஸ். 'இந்த ஆலோசனையை நடைமுறைப்படுத்த ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். இவ்வாறான எதேச்சரிகாரப் போக்கு நிறுத்தப்பட வேண்டும்' என்று கடும் கண்டனமும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸால் உலக அளவில் 13 லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 75 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய பொருளாதாரச் சக்திபடைத்த நாடுகள் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த வைரஸுக்கு மருந்து கண்டுபிடிப்பதில் தற்போது ஐரோப்பிய வட்டகையில் அதிக முனைப்புக் காட்டப்படுகின்றது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜேர்மனி, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளின் ஆய்வாளர்கள் தனித்தனியே தடுப்பு மருந்துகளை உருவாக்கியுள்ளனர். இந்தத் தடுப்பு மருந்துகள் எலிகளுக்குப் பரிசோதிக்கப்பட்டுள்ளன. பல சுற்றுப் பரிசோதனைகளுக்குப் பின்னர் அவை மனிதர்களுக்குச் செலுத்தப்படும். இந்த நிலையில், தற்போதே அந்தத் தடுப்பு மருந்துகளை ஆபிரிக்க மக்களுக்குச் செலுத்திப் பார்க்கலாம் என்று பிரான்ஸ் ஆய்வாளர்கள் இருவர் ஆலோசனை தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்துக்களை முழுவதுமாக நிராகரித்துள்ளார் உலக சுகாதார அமைப்பின் தலைவர் கேப்ரியேசஸ்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆபிரிக்க மண்ணும், மக்களும் ஒருபோதும் கொரோனா வைரஸுக்கான தடுப்பூசி மருந்துகளை பரிசோதனை செய்யும் கூடமாக இருப்பதை அனுமதிக்க முடியாது. ஒரு தடுப்பூசியை பரிசோதிக்க உலக சுகாதார அமைப்பு என்ன வழிமுறைகளை, விதிமுறைகளை கடைபிடிக்கக் கூறியுள்ளதோ அதை உலகச்சமூகம் கடைப்பிடிக்க வேண்டும். அது ஆபிரிக்காவாக இருந்தாலும், ஐரோப்பிய நாடுகளாக இருந்தாலும் சரி விதி முறைகள் அனைவருக்கும் ஒன்றுதான்.

முதலில் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் இதுபோன்ற தங்கள் ஏதேச்சதிகார மனப்பாங்கை நிறுத்த வேண்டும். ஆபிரிக்க மக்கள் மீது தடுப்பூசிகளை பரிசோதிக்கும் ஆலோசனைகள் என்பது இனவெறி பிடித்த வார்த்தைகள், இதை கடுமையாக எதிர்க்கிறோம், கண்டனம் தெரிவிக்கிறோம். அது போன்ற தடுப்பூசிகளை ஆபிரிக்க மண்ணில் மட்டுமல்ல எந்த நாட்டிலும் பரிசோதிக்கவும் அனுமதிக்க மாட்டோம். மனிதர்களை மனிதர்களாக நடத்த வேண்டும் - என்றார்.

(ம)

கொரோனா பெருந்தொற்று

# சீனாவில் முதல்முறை இறப்பு இல்லாத நாள்!

வுகான், ஏப். 8

கொரோனா வைரஸ் அடையாளப்படுத்தப் பட்ட நாள் முதல் தொடர்ந்து இறப்புக்களைச் சந்தித்து வந்தது சீனா. இந்த நிலையில், கொரோனாவால் இறப்பு இல்லாத நாளாக நேற்றையதினம் அமைந்தது என்று அறிவித்தது சீனா.

இது தொடர்பில் சீன சுகாதார ஆணையம் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா மையமாக முதன் முதலில் திகழ்ந்த சீனாவில் மார்ச் முதல் கொரோனா தொற்று குறையத் தொடங்கியது. ஆனால் அயல்நாடுகளிலிருந்து வருபவர்கள் மூலம் தொற்று மீண்டும் இரண்டாம் அலையாக பரவத் தொடங்கியது. இந்த வகையில் சுமார் 1000 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும் 32 கொரோனா நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் சீனா நோக்குறி குணங்கள் இல்லாத விவரங்களை முதல் முறையாக வெளியிடத்தொடங்கிய தன் காரணம் குறிகுணங்கள் இல்லாமல் அமைதியாக கொரோனாவைச் சுமந்து செல்பவர்கள் குறித்த கவலை உலகெங்கும் பரவத் தொடங்கியதே.

வுகானில் எதிர்கால கொரோனா வைரஸ் மறு எழுச்சி ஏற்படலாம் என்ற அச்சமும் அங்கு உள்ளது. இங்குதான் முதன் முதலாக கடந்த ஆண்டுஇந்தக்கொலைகார வைரஸ் உருவானது. இன்று வரையும் கூட சீனாவில் 81 ஆயிரத்து 740 பேர் வைரஸுக்குப் பாதிக்கப்பட்டுள்ளனர், 3,331 பேர் இதுவரை மரணமடைந்துள்ளனர். இந்த மரணங்களிலும் பெரும்பாலும் வுஹான் மற்றும் ஹூபே மாகாணத்தைச் சுற்றித்தான் நிகழ்ந்துள்ளன என்றது.

(ம)

# ஜப்பானில் அவசரநிலை அறிவிப்பு

டோக்கியோ, ஏப். 8



கொரோனாவின் தாக்கம் ஜப்பானில் அதிகரித்து வருவதை அடுத்து அங்கு நேற்றுமுதல் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பால் பெரும் அழிவைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புள்ள நாடுகளின் பட்டியலில் ஜப்பானும் ஒன்று. அந்த நாட்டின் டோக்கியோ உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நேற்று முதல் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் இது தவிர்க்க முடியாத அறிவிப்பு என்று ஜப்பான் அரசு குறிப்பிட்டுள்ளது.

(ம)

# இத்தாலியில் பாதியாக குறைந்தது உயிரிழப்பு

உரோம், ஏப். 8

கொரோனாவால் இத்தாலியில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை முன்னைய நாள்களிலும் பார்க்க தற்போது அரைவாசியாகக் குறைந்துள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இத்தாலியில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 1,000 முதல் 1,200 பேர் வரையில் கொரோனாவால் உயிரிழந்தனர். கடந்த இரண்டு, மூன்று நாள்களாக இந்தத் தொகை 500 முதல் 600 என்றவாறாகக் குறைந்துள்ளது.

(ம)

# கொரோனாவால் இறந்தவரின் உடல் நேற்று மாலை தகனம்

கொழும்பு,ஏப்.8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 6 ஆவது நபர் நேற்றுக் காலை உயிரிழந்தார். அவரின் சடலம் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று மாலை தகனம் செய்யப்பட்டது.

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த தெஹிவளையைச் சேர்ந்த 80 வயதான வயோதிபரே நேற்று உயிரிழந்தார்.

இவரின் மைத்துனர் இலங்கை வரும் வெளிநாட்டவர்களுக்கான சுற்றுலா வழிகாட்டியாகச் செயற்படுபவர். உயிரிழந்தவரின் மனைவி, சகோதரி, சகோதரியின் மகன் ஆகியோர் ஏற்கனவே கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபரின் சடலம் நேற்று மாலை கொடிகாவத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் உடல் தகனம் செய்யப்பட்டது.

(க22)

# கொமர்ஷல் வங்கியின் நடமாடும் சேவை வடமராட்சி கிழக்கில்

வடமராட்சி,ஏப்.8

கொமர்ஷல் வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் நடமாடும் வங்கிச் சேவை இன்று புதன்கிழமை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நடைபெறும்.

நடமாடும் சேவையில் தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவை மற்றும் கருமபீட கொடுக்கல் வாங்கல் சேவையை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மருதங்கேணி பிரதேச முன்றலில் காலை 9 தொடக்கம் முற்பகல் 11 வரையும், நாகர்கோவிலில் முற்பகல் 11.15 தொடக்கம் நண்பகல் 12.15 வரையும், அம்பன் பாடசாலை முன்பாக நண்பகல் 12.30 தொடக்கம் பிற்பகல் 1.30 வரையும், பொலிகண்டி ஆலடிச் சந்தையடியில் பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரையும், வல்வெட்டித்துறை நகரத்தில் பிற்பகல் 3.45 தொடக்கம் மாலை 4.45 மணிவரை இடம்பெறும்.

தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரம் ஊடாக அனைத்து வங்கிகளினதும், வலைப்பின்னல் இலத்திரனியல் அட்டைகளூடாக பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்று வங்கிக் கிளையினர் தெரிவித்துள்ளனர். (க23,173)

# இலவசமாக மானியஉரம்

முல்லைத்தீவு,ஏப்.8
முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர், ஒட்டுசுட்டான்கமநல சேவை நிலையத்தில் மானிய உரம் இலவசமாக வழங்கப்பட்டது.
ஆளணி குறைவடைந்த போதிலும், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சிரமம் பாராது விவசாயிகளுக்கான மானிய உரத்தை அவரே முன்னின்று வழங்கினார். (க-500)

# 30,000 பீடிகளுடன் சிக்கிய இருவர்

திருமலை,ஏப்.8
திருகோணமலையில் 30 ஆயிரம் பீடிகளுடன் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.
மூதூர் பகுதியைச் சேர்ந்த வாகனத்தின் சாரதியும், உதவியாளருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தம்புள்ளயிலிருந்து மூதூருக்கு 'பட்டா'ரக வாகனத்தில் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட பீடிகளை, அனுமதிப்பத்திரமின்றி கொண்டு சென்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுக் காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட வேளை இவர்கள் இருவரும் அங்கிருந்து பீடிகளை எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளனர்.
சந்தேக நபர்கள் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

# நிர்ணய விலைக்கே சீனி மீறினால் வழக்குப் பாயும்!

## மன்னாரில் தீர்மானம்

**மன்னார்,ஏப்.8**
**சீனியின் நிர்ணய விலையான 125 ரூபாவுக்கும் அதிகமான விலையில் சீனியை, விற்பனை செய்வோர் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் கூட்டுறவு சங்கம், சமுர்த்தி பாவனையாளர் அலுவலர், பிரதேச செயலாளர்கள், மொத்த வியாபாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.
தற்போதைய கொழும்பு நிலவரப்படி ஒரு கிலோ சீனி 120 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. ஆனால் மன்னாரில் 130 ரூபா முதல் 140 ரூபாவரையில் ஒரு கிலோ சீனி விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், வியாபாரிகள் பாதிக்கப்படக்கூடாது. அதேவேளை மக்களும் பாதிக்கப்படக் கூடாது. ஆகவே இவற்றை கருத்தில் கொண்டு மன்னார் மாவட்டத்தில் வெள்ளைச் சீனியின் நிர்ணய விலை ஒரு கிலோ 125 ரூபாவுக்கு விற்கப்பட வேண்டும். இதனை மீறுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என்று தெரிவித்தார். இந்த உத்தரவை இறுக்கமாக நடைமுறைப்படுத்துமாறும் மன்னார் பாவனையாளர் அலுவலர்களிடம் மாவட்டச் செயலர் கேட்டுக் கொண்டார். (ப-213)

# யாழ்ப்பாணத்தில் பரிசோதனைகள்

## வரவேற்கின்றார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம்,ஏப்.8
கொரோனோ வைரஸ் தொற்றுப் பரிசோதனைகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வது மக்களின் மனதுக்கு ஆறுதலளித்துள்ளது. இந்த உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
உலகை உலுக்கி வருகின்ற கொரோனோ தொற்று இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. கொரோனோச் சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களுக்கான பரிசோதனைகள் யாழ்ப்பாணத்துக்கு வெளியிலேயே பல நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.
யாழ். போதனா வைத்தியசாலையில் மாதிரிகள் பெறப்பட்டு அதனை வெளி மாவட்டத்துக்கு அனுப்பித் தான் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் தற்போது அந்தப் பரிசோதனைகள் யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலேயே இந்தப் பரிசோதனைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைகள் இங்கு மேற்கொள்ளப்படுவது கொரோனோ தொடர்பாக அச்சப்படுகின்ற மக்களுக்கு மன அறுதலை அளிப்பதாக அமைகிறது.
அது மட்டுமல்லாமல் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள், வைத்தியத் துறைசார்ந்தவர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்- என்றார். (க-20)

# கொரோனாவிலிருந்து விடுபடுவதற்கு 'தூஆ'!

மட்டக்களப்பு, ஏப். 8
கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட 'தூஆ' பிரார்த்தனை சம்மாந்துறை பெரிய பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இந்த 'தூஆ' பிரார்த்தனையை சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, ஜம்மியத்துல் உலமா சபை, மஜ்லீஸ் அஸ்ஸூரா சபை ஆகிய முற்சபைகள் இணைந்து ஏற்பாடு செய்தன. 'தூஆ' பிரார்த்தனையை மௌலவி மஹ்ரூப், மௌலவி பசீல் ஆகியோர் நிகழ்த்தினர். (ம)

# கட்டுப்பாடற்று அலையும் கால்நடைகள்

ஒட்டுசுட்டான்கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட கற்சிலைமடுப் பகுதியில் இரவு பகலாகக் கால்நடைகள் கட்டுபாடின்றி அலைந்து திரிகின்றன.
இதனால் பலரது காணிகளில் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிப் பயிர்ச்செய்கை அழிவடைந்து செல்வதாக வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
ஊரடங்குச் சட்டத்தால் வீடுகளுக்குள் முடங்கியுள்ள மக்கள், அன்றாட வாழ்க்கைச் செலவுக்காக சில மரக்கறி வகைகளை வீட்டுத் தோட்டமாகப் பயிரிட்டுள்ளனர்.
இவற்றை, கட்டுப்பாடின்றி அலையும் கால்நடைகள் அழித்து வருகின்றன என்று செய்கையாளர்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.
எனவே கால்நடைகளைக் கட்டுப்படுத்தகமநலசேவை நிலைய சட்ட திட்டங்களுக்கமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# வவுனியாவில் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி திட்டம் ஆரம்பம்

வவுனியா,ஏப்.8
வவுனியா மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட அபிவிருத்திக்கான மரக்கறி விதைகள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்; தற்போது வவுனியா மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட அபிவிருத்திக்கான மரக்கறி விதைகள் மற்றும் மரக்கறி நாற்றுக்கள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வவுனியா மாவட்டத்தினை வசிப்பிடமாக கொண்டவர்கள் வவுனியா நகருக்கு வருகைதந்து இலுப்பையடியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல சேவை நிலையத்தில் 20 ரூபாவைச் செலுத்தி குறித்த நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு கிராமங்களிலும் அமைந்துள்ள கிராம அலுவலர் காரியாலயங்களில் குறிப்பிட்ட நாள்களில் வருகைதந்தும் நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
நாளை வியாழக்கிழமை தோணிக்கல்லிலும், வெள்ளிகிழமை கோவில்குளம், இறம்பைக்குளத்திலும், சனிக்கிழமை பண்டாரிக்குளம், உக்குளாங்குளத்திலும், ஞாயிற்றுக்கிழமை, சமனங்குளம், தெற்கிலுப்பைக்குளத்திலும், வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் வவுனியா நகரம், வெளிக்குளத்திலும், புதன்கிழமை பூந்தோட்டத்திலும், வியாழக்கிழமை புதுக்குளம், மூன்றுமுறிப்பிலும், வெள்ளிக்கிழமை எல்லப்பர்மருதன்குளம், முருகனூரிலும், சனிக்கிழமை கல்நாட்டினகுளத்திலும், ஞாயிற்றுக்கிழமை ஆசிகுளம், பெரியகோமரசன்குளத்திலும், 21ஆம் திகதி திங்கட்கிழமை காத்தார்சின்னகுளம், மகாறம்பைக்குளத்திலும், 22 செவ்வாய்க்கிழமை நொச்சிமோட்டை, பறன்நட்டகல்லிலும் புதன்கிழமை கள்ளிகுளத்திலும் நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.
இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள, கோவில்குளம் 0242221053, செட்டிகுளம் 0772608277, உளுக்குளம் 0716386555, பம்பைமடு 0779362215, ஓமந்தை 0774215305, கனகராயன்குளம் 0778068339, நெடுங்கேணி 0779885667, மடுக்கந்தை 0702612923 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தலாம் -என்றார். (ப-110)

# மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் 136 குடும்பங்களுக்கு உலர்உணவு

முல்லைத்தீவைச் சேர்ந்த 136 குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவுமருத்துவமாணவர் ஒன்றியம் இந்த அத்தியாவசிய உலர் உணவுப்பொருள்களை வழங்கியுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் வறுமைப்பட்ட நிலையில் உள்ள மக்களுக்கே இவ்வாறு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பகுதிகளில் மிகவும் வறுமையான நிலையில் வாழ்கின்ற 136 குடும்பங்களுக்கு, ஒரு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன என்றும் அந்த மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (ப-246)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.04.2020இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.